**செய்தி வெளியீடு எண்: 031** **நாள்: 11.01.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 10.1.2019 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திண்டுக்கல் மாநகராட்சியில் 70 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், தஞ்சாவூர், தேனி, காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் 79 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6 திட்டப் பணிகளையும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் தேனி மாவட்டத்தில் 20 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 2 குடிநீர் திட்டங்களையும் திறந்து வைத்தார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திண்டுக்கல் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் பழமையான ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்க திட்ட பிரதான மற்றும் பகிர்மானக் குழாய்களை புனரமைப்பு செய்து தினசரி குடிநீர் வழங்கும் வகையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு இணைய நிதி மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ் 70 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம், திண்டுக்கல் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 120 லிட்டர் குடிநீர் வழங்க இயலும்.

மேலும், தஞ்சாவூர் மாநகராட்சியில் 48 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டம்; காஞ்சிபுரம் மாவட்டம், பல்லவபுரம் நகராட்சியில் 24 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுபட்ட 42 கிலோ மீட்டர் நீளப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம்;

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்புகள்; போடிநாயக்கனூர் நகராட்சி மற்றும் பெரியகுளம் நகராட்சிகளில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் தலா 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 உள்நோயாளிகளின் உதவியாளர்களுக்கான சிறப்பு தங்குமிடங்கள்; இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி, அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள்நோயாளிகளின் உதவியாளர்களுக்கான சிறப்பு தங்குமிடம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் தேனி மாவட்டம் – ஆண்டிபட்டி, கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த கண்டமனூர் மற்றும் 15 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 5 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்; தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சிக்கு 14 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்;

என மொத்தம் 169 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நகராட்சி நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் சி.என். மகேஸ்வரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**